

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 17-07-2025


# வீடு தேடி வரும் முதலமைச்சர்!

தங்களது கோரிக்கைகளைச் சொல்ல அரசை நோக்கி மக்கள் வரும் காலத்தை மாற்றி, அரசே மக்களை நோக்கி வருவதைப் போல ஆக்கி இருக்கிறார் திராவிட மாடல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் - ஆகிய திட்டங்களின் தொடர்ச்சியாக 'மக்களைத் தேடி அரசு' வருகிறது. 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற முகாம்களின் மூலமாக ஒவ்வொரு மனிதரையும் அரசு நேரடியாகச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளைக் கேட்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, 'மக்களோடு வாழ்' என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.**

**அனைத்து அரசுகளும் மக்களுக்கான அரசுகள்தான். மக்களாட்சியின் இலக்கணம் என்பது அதுதான். அந்த இலக்கணத்தை நம் கண் முன் கொண்டு வந்து காட்டுவதாக 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தை வடிவமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

அரசுத் துறையின் சேவைகள் அனைத்தும், பொதுமக்களின் வீடுகளுக்கே வந்து வழங்கும் திட்டமாக இதனை உருவாக்கி இருக்கிறார் முதலமைச்சர். தமிழ்நாடு முழுவதும் கடந்த 15 ஆம் தேதியில் இருந்து இத்திட்டம்தொடங்கப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அதே நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் 10 ஆயிரம் முகாம்கள் உருவாக்கப்பட உள்ளன. இந்த முகாமுக்கு வரும் மக்களுக்கு கையேடு வழங்கப்படும். அதன் மூலமாக தங்களுக்குத் தேவையான சேவையை மக்கள் பெறலாம். இந்த முகாமில் கலந்து கொள்ளச் சொல்லி தன்னார்வலர்கள், வீடுவீடாகச் சென்று அழைப்பு விடுப்பார்கள். முகாமில் தங்கள் கோரிக்கையைப் பதிவு செய்தால், உடனடியாகத் தீர்வு கிடைக்கும்.

சிதம்பரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கி வைத்த முகாமில் கலந்து கொண்டார் சபரீஷ் என்ற மாற்றுத் திறனாளி. அவருக்கு காதொலிக் கருவி வேண்டும் என்று அந்த மாணவரின் தாய் தனது கோரிக்கையை பதிவு செய்தார். ஒரு மணி நேரத்தில் காதொலி கருவி அவருக்குத் தரப்பட்டது. **"ஒரு மணி நேரத்தில் கொடுத்துவிட்டார்கள். இது என் பையனுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. காதொலி கருவி எவ்வளவு தொகை என்று எனக்குத் தெரியாது. உடனடியாக வாங்கிக் கொடுத்து விட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி"** என்று சபரீஷின் தாய் உருக்கமாகக் குறிப்பிட்டார். அதே போலத்தான் பலருக்கும் பல சேவைகள் உடனடியாகக் கிடைத்துள்ளன.

ஒவ்வொருவரும் தங்களது சேவைகளுக்காகப் பல்வேறு அலுவலகங்களுக்கு பல நாட்கள் அலைந்து பெற வேண்டிய சேவைகளை, உடனடியாக ஒரே ஒரு முகாம் மூலமாக வழங்கி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதுதான், 'மக்கள் முதல்வர்' என்பதற்கான இலக்கணம் ஆகும். மக்களோடு மக்களாக இருக்கும் முதல்வர் என்பதற்கான எடுத்துக்காட்டு ஆகும்.

**சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களின் கோரிக்கைகளை தி.மு.க. தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திரட்டினார்கள். 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் உங்களது கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து சாத்தியமான அனைத்துத் திட்டத்தையும் உருவாக்கித் தருவேன்' என்று வாக்குறுதி தந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித்துறையை உருவாக்கி, அவை அனைத்து வேண்டுகோள்களையும் நிறைவேற்றி வைத்த சாதனை முதலமைச்சர்தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த அடிப்படையில் 4 லட்சத்து 57 ஆயிரத்து 645 மனுக்களுக்குத் தீர்வு கண்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

அடுத்தடுத்து வரும் மனுக்களைப் பரிசீலித்து தீர்வு காண, 'முதல்வரின் முகவரி' என்ற தனித்துறையை உருவாக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதுவரை 95 லட்சத்து 65 ஆயிரத்து 885 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 92 லட்சத்து 27 ஆயிரத்து 751 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தொலைபேசி மூலமாக தங்களது கோரிக்கைகளை வைக்க, 'நீங்கள் நலமா?' என்ற திட்டத்தைத் தொடங்கினார். சென்னை கோட்டூர்புரத்தில் 120 இருக்கைகளுடன் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது. அடுத்ததாக 'எளிமை ஆளுமை' என்ற திட்டத்தைத் தொடங்கினார்கள். இவை அனைத்தும் மக்களின் குறைகளைத் தீர்த்து வருகின்றன.

**தாம்பரத்தைச் சேர்ந்த ராதா என்ற பெண்மணி, "நான் பூ வியாபாரம் செய்கிறேன். எங்களுக்கென்று நிரந்தரமாக வீடு இல்லை. 'மக்களுடன் முதல்வர்' முகாம் நடப்பதாக எங்க ஏரியாவுல ஆட்டோவுல சொல்லிட்டுப் போனாங்க. நான் அங்கே போய் மனு கொடுத்தேன். உடனே எனக்கு வீடு கிடைத்துவிட்டது. ஒரே ஒரு மனு கொடுத்தேன். என் கனவு நிறைவேறிவிட்டது" என்று சொல்லி இருக்கிறார். இரண்டு மணி நேரத்தில் சாதிச் சான்றிதழ் கிடைத்துவிட்டது என்று சொல்லி இருக்கிறார் திரு.வி.க. நகர் யமுனா. "சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்ட எனக்கு மூணு வருஷத்துக்கு முன்னால் ஒரு காலை எடுத்துட்டாங்க. இந்த முகாமுக்கு போய் எழுதிப் போட்டேன். காலை அளவெடுக்க வந்தாங்க. செயற்கைக் கால் செஞ்சு கொடுத்தாங்க. மூணு வருஷம் கழிச்சு இப்ப நான் நடக்கிறேன்" என்று சொல்லி இருக்கிறார் ராணிப்பேட்டை மாவட்டம் திமிரியைச் சேர்ந்த ஜெகதீசன்.**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர், மக்களுடன் முதல்வர் ஆகிய திட்டங்களின் நீட்சியாக, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தைத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். கோரிக்கைகள் கொடுப்பவர்களைப் பார்த்து எரிச்சல் அடையும் சூழ்நிலையை மாற்றி, கோரிக்கை மனுக்களைக் கேட்டு வாங்கும் அரசாக தனது அரசை மாற்றிக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**'ஒவ்வொரு மனிதரின் தேவையையும் கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து நிறைவேற்றும் அரசு இது' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். ஒரு தந்தை மனநிலையில் ஒரு தலைவர், ஒரு முதலமைச்சர் தமிழ்நாட்டுக்குக் கிடைத்திருக்கிறார்.**



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (16.7.2025) பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, ரஷ்ய நாட்டு பயணிகளிடம் உரையாடினார்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

## நான்கு இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முழு திரு உருவ வெண்கல சிலை !

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மயிலாடுதுறை, ஜூலை 17–**

**கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜூலை 15, 16ம் தேதிகளில் கலைஞர் சிலை திறப்பு விழா– அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள சிதம்பரத்திலிருந்து மயிலாடு துறை மாவட்டத்திற்கு 15ஆம் தேதி மதியம் கொள்ளிடம் வந்தடைந்தார். கொள்ளிடத்தில் புறவழிச் சாலையில் கொள்–ளிடம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கலத்தலான முழு திரு உருவச் சிலையை திறந்து வைத்தும், 60 அடி உயர கொடிக்கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.**

அதைத் தொடர்ந்து திருவெண்காடு சென்று பின்னர் மாலை சீர்காழி கிழக்கு ஒன்றியம் செம்பதானிருப்பில் சீர்காழி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கலத்திலான முழு திரு உருவச் சிலையைச் திறந்து வைத்து கழகக் கொடி ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து கருவி, கீழையூர், வழியாக மயிலாடுதுறை சென்ற கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் மணக்குடி அருகே பாலாஜி நகரிலிருந்து பொது மக்களை சந்திக்கும் வகையில் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் (ரோட் ஷோ ) கால் டாக்ஸி, மணிக்கூண்டு, சின்ன கடை தெரு, வழியாக கச்சேரி சாலையில் கோட்டாட்சியர் அலுவலகம், வளர்ச்சி அலுவலகம் வழியாக அண்ணா பகுத்தறி மன்றம் வரை நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து மனுக்களைப் பெற்றார். அதைத் தொடர்ந்து கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுப்பிக்கப்பட்ட அண்ணா பகுத்தறி மன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கலத்தில் ஆன திரு உருவச் சிலையை திறந்து வைத்து 68 உயர கொடி. கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் புதுப்பிக்கப்பட்ட அண்ணா பகுத்தறிவு மன்றம் சென்று பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை குத்தாலம் கிழக்கு ஒன்றியம் வழுவூரில் குத்தாலம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைத்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.பின்னர் மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் நடைபெற உள்ள அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் ரூ433 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சிகளில் கழக முதன்மைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளர்,நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு,பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ. டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன், தொகுதி பார்வையாளர்கள் மயிலாடுதுறை தொகுதி தாட்கோ தலைவர் என். இளைய ராஜா, பூம்புகார் தொகுதி மன்னை த.சோழ ராஜன், சீர்காழி தொகுதி மு.தினேஷ் குமார்,

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜகவீரபாண்டியன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை. சௌமியான், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங் கோவன், ஜி.என்.ரவி, முத்து. ம.கேந்திரன்.மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (ஏ) என்.செல்வராஜ்,ம.சுப்பராயன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வசேது.ரவிக் குமார், பஞ்சு. குமார், என்.இளையபெருமாள், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், மங்கை எம்.சங்கர், ஞான.இமையநாதன், மூவலூர் எம்.மூர்த்தி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், அமிர்தவிஜயகுமார், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, மலர்விழிதிருமாவளவன், ப. முருகமணி, பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, கே.அண்ணாதுரை,

மாவட்ட அறங்காவல் குழுத் தலைவர் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமி நாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், சுபாநெடுஞ்செழியன், நத்தம் ஏ.வின் சென்ட், ஹர்ஷத், பி.கென்னடி, அரசு வழக்கறிஞர்கள் இரா.சேயோன், சி.அருள்தாஸ்

மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே. மருது, வி.எஸ்.என்.செந்தில், ஆர்.முருகன், இரா. மனோகரன், பெரு.வீரமணி, ஆர் செல்வராஜ், ஆர்.எஸ்.ஸ்ரீதர், ஆர். சாந்தி, க.அறிவுச்செல்வன்,காளி.தேசப்பன், முத்து குபேரன், இரா காளி கலைவன், பாலாஜி, டி.ராஜ்குமார், இரா.மனோகரன், திபா.சத்தியேந்திரன், வி.எஸ்.பிரபாகர், எம். எஸ்.முத்து குபேந்திரன், எஸ்.எம்.சம்சுதீன்,

மா.வைத்தியநாதன், வெடி பாலமுருகன், முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் ஒன்றியக் குழு முன்னாள் தலைவர்கள் வி.ஜெயபிரகாஷ், கே.மகேந்திரன். காமாட்சி மூர்த்தி, கமலஜோதி தேவேந்திரன், நந்தினி ஸ்ரீதர்,

பேரூராட்சி தலைவர்கள் குணசங்கரி குமரவேல், சங்கீதாமாரியப்பன், கண்மணி அறிவாழகன், பூங்கொடிஅலெக்சாண்டர், மற்றும் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள்உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிகள் நகர்மன்ற துணைத் தலைவர் உறுப்பினர்கள் பேரூராட்சி துணைத் தலைவர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள அரசு மகளிர் பள்ளியில் பயிலும் மாணவிகளின் திறன் மேம்பாட்டிற்கான இலவச AI பயிற்சி திட்டத்தை தொடங்கி வைத்து, மாணவிகள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி உரையாற்றினார். தூத்துக்குடி உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ. கீதாஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், கோவில்பட்டி நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன் பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ், கிழக்கு நகர கழகச் செயலாளர் சுரேஷ், நகர் மன்ற உறுப்பினர் கு.தவமணி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், நகர மாணவரணி மயில் கர்ணன் மற்றும் பள்ளி மாணவிகள், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.